

# ஒவ்வொரு அடியும் ஒரு போராட்டம்

*அவனது இதயத்தில் ஒரு வார்த்தை ஆழமாகப் பதிந்தது: அது 'ஜெபி' என்பதுதான்.*

ஓர் ஓய்வுநாள் காலையில், ஹெல்சின்கியில் உள்ள ஓய்கோஸ் ஹவுஸுக்கு முதன்முதலில் ஜோ வந்தபோது, உள்ளே செல்வதற்கு அவனுக்கு மிகவும் தயக்கமாக இருந்தது. திரும்பி சென்றுவிடலாம் என்றுகூட யோசித்தான். சமீபத்தில் தான் தேவனிடம் செல்லவேண்டும் என்கிற ஆசை அவனுக்குள் ஏற்பட்டிருந்தது. அதனால்தான், வீட்டை விட்டுக் கிளம்பி, ரயில் நிலையத்திற்கு நடந்து சென்று ரயிலில் ஏறி, இதற்குமுன் தான் அறிந்திராத ஒரு வீட்டிற்குச் செல்கிறோம் என்கிற பதற்றம் அவனுக்குள் மிகவும் அதிகரித்தது.

"ஒவ்வொரு அடியும் ஒரு போராட்டமாக இருந்தது, ஆவிக்குரிய போராட்டம் ஒன்று இருப்பதெல்லாம் அப்போது எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒன்று அங்கு நான் செல்வதைத் தடுத்துக் கொண்டிருந்தது மட்டும் புரிந்தது" என்று சொன்னான்.

நிலையத்திலிருந்து இறங்கி, ஐந்து நிமிடத்தில் அந்த வீட்டிற்கு நடந்து சென்றுவிடலாம். மாறாக, பதினைந்து நிமிடங்கள் ஆனது, அங்கு செல்வதற்குள் மூன்று முறை ஜெபித்துவிட்டான்.

கதவுக்கு வெளியே நின்றான்; போதும், ஜோவுக்கு தயக்கமாக இருந்தது. 'ஒருவேளை இது தவறான இடமாக இருந்தால் என்ன செய்வது? அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது?' என்று யோசித்தான். அழைப்புமணியை அழுத்தினான், ஐந்து வினாடிகளுக்குள் யாரும் கதவைத் திறக்காவிட்டால், வீட்டிற்கு

ஓடிவிடுவேன்’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

கதவை உடனடியாகத் திறந் தார்கள்.

அன்பாக சிரிப்புடன் தன்னை வரவேற்றதுமே, காலைமுதலே தன்னிடம் காணப்பட்ட பயம் மறைந் தது. ‘அது ஒரு தடையைத் தாண்டிச் செல்வதுபோல் இருந்தது, நான் உள் ளுக்குள் கால் வைத்த கணமே எனது பதற்றம் மறைந்துவிட்டது’ என்று கூறினான்.

முதன்முறையாக, வித்தியாச மான ஒரு ஆலயத்தைப் பார்த்த அனுபவம் உண்டானது.

ஜோவின் அந்தப் பயணம், அவன் ஃபின்லாந்திற்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தொடங் கியிருந்தது. தாய்லாந்தில் ஒரு ஃபின் லாந்து தந்தைக்கும் தாய்லாந்து தாய்க்கும் பிறந்த ஜோ, தனது குழந் தைப்பருவத்தின் பெரும்பகு தியை அட்வென்டிஸ்ட் பள்ளிகளில் படிப் பில் கழித்தான். வேதாகம கதை களைக் கற்றுக்கொண்டான், பாடல் களைப் பாடப் பழகினான், சாப்பிடு வதற்குமுன் ஜெபித்துவிடுவான்; ஆனாலும் விசுவாசவாழ்க்கையிலி ருந்து தான் தள்ளியே இருப்பது போல உணர்ந்தான்.

“தேவன் இருக்கிறார் என்று நம்பினேன், ஆனால் அவரை நான் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்க வில்லை’ என்று கூறினான்.

ஜோவிற்கு 13 வயதாக இருந்த போது, அவனது தாய் காலமானார். அவர் இறப்பதற்குச் சற்று முன்னர் தான் கிறிஸ்தவ விசுவாசத்தைக் கண்டுகொண்டார் என்றாலும், அந்த இழப்பு ஜோவை ஆழமான குழப் பத்திலும் கசப்புணர்விலும் ஆழ்த் தியது. ஒரு காலத்தில் அவனுக்கு புகலிடமாக இருந்த ஒரு இளைஞர் குழுவும் அதன்பின் விரைவில் கலைந்து போனது, மேலும் தேவ னைப்பற்றிய அவனது கேள்விகளுக் கும் பதில்கள் கிடைக்கவில்லை.

“அன்பான ஒரு தேவன் ஏன் என் தாயையும், அதன் பிறகு அந்த இளைஞர் குழுவையும் என்னிட மிருந்து பறித்தார் என்று எனக்குப் புரியவில்லை, அதனால், அவரிட மிருந்து விலகிச் சென்றேன்” என்று ஜோ கூறினான்.

பல வருடங்களாக, சொந்தப் பந்தங்கள் வேண்டுமென ஆசைப் பட்டு, கேளிக்கை விருந்துகளிலும், மதுபான விருந்துகளிலும், வேறே ஆவிமார்க்க விஷயங்களிலும் கலந்துகொண்டான். ஆனால் எது வுமே நிலைக்கவில்லை. தன்னுடைய வலியை மறக்கடிக்கச்செய்ததுபோல் தோன்றிய விஷயங்கள், காலப் போக்கில் அந்த வலியை இன்னும் அதிகமாக்கின.

இருபதுகளின் பிற்பகுதியில், ஜோ முற்றிலும் வெறுமையையும் சோர்வையும் உணர்ந்தான். மனச் சோர்வும் பதற்றமும் அவனைப் பெரிதும் வாட்டின; ஒரு வேதனை யான காதல் முறிவும் அவனது விரக் தியை மேலும் தீவிரப்படுத்தியது.

“ஓர் இரவில், இந்த உலகம் எனக்குத் தருவதற்கு இனி எதுவுமே இல்லை என்று உணர்ந்தேன்” என்று கூறினான்.

தனது வாழ்க்கையில் மிகமோச மான அடிமட்ட நிலையை எட்டிய

போது, அவனது இதயத்தில் ஒரு வார்த்தை ஆழமாகப் பதிந்தது: அது 'ஜெபி' என்பதுதான்.

"யாரிடம் ஜெபிக்கவேண்டும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது; நான் சிறுவனாக இருந்த போது அறிந்துகொண்ட அதே தேவனிடம்தான் ஜெபிக்கவேண்டும் என்பதை அறிந்து கொண்டேன்" என்று ஜோ கூறினான்.

அன்று இரவு, தனது வேதனையைப் போக்கவும், தனக்கு நல்வாழ்வைத் தரவும் தேவனிடம் மிகவும் உண்மையாகவும் விரக்தியோடும் ஜெபம் செய்தான். பல மாதங்களாகத் தூக்கமில்லாமல் தவித்திருந்ததால் ஏற்பட்ட சோர்வினால், அப்படியே தூங்கிப்போனான்.

அவன் விழித்தபோது, ஏதோ ஒன்று மாறியிருந்தது.

"மனச்சோர்வுநீங்கியிருந்தது, அது என்னால் நடந்தது அல்ல. அது கண்டிப்பாக தேவனால்தான் நடந்திருக்கவேண்டும்" என்று சொன்னான்.

சில நாட்களுக்குப் பிறகு, ஒரு குளிர்காலத்தின் கடுமையான இருட்டில் ஜோ மிதிவண்டியில் வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவனது இதயத்தில் மகிழ்ச்சி பொங்குவதை உணர்ந்தான். "சூரியன் எனக்காக மட்டுமே பிரகாசிப்பதுபோலத் தோன்றியது" என்று கூறினான். நன்றியுணர்வு நிறைந்த இதயத்துடன், தனது வாழ்க்கையைத் தேவனுக்கு முழுமையாக அர்ப்பணித்தான்.

அதன்பின் ஒரு சில நாட்களிலேயே, தனக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று ஓய்கோஸ் ஹவுஸுக்கு ஜோ சென்றான்.

"ஆலயத்தில் இதுபோன்ற ஒன்றை நான் இதற்கு முன்பு அனுபவித்ததே இல்லை, நான் சொல்வதை அங்கிருந்தவர்கள் கவனித்துக் கேட்டார்கள். அவர்கள் எனது அனுபவத்தை தெரிந்துகொள்ள விரும்பினார்கள். அங்கு எந்தவித மானவிமர்சனமும்இருக்கவில்லை, மாறாக ஒரு சொந்த பந்த உணர்வு மட்டுமே இருந்தது" என்று கூறினான்.

அந்த முதல் ஓய்வுநாளில் ஜோ நீண்ட நேரம் அங்கேயே இருந்தான், தன்மீது உண்மையிலேயே அக்கறை காட்டியவர்களிடம் தன்னுடைய அனுபவ சாட்சியை மீண்டும் மீண்டும் பகிர்ந்துகொண்டான். அன்றிலிருந்து, ஒரு ஆவிக்குரிய குடும்பம் தனக்குக் கிடைத்துவிட்டதாக உணர்ந்துகொண்டான்.

"என்னை மிகவும் கவர்ந்த விஷயம் என்னவென்றால், இயேசுவின் போதனைகளைப்பற்றிப் பேசுவதோடுமட்டும் அவர்கள் நிறுத்திக்கொள்வதில்லை, அதை அப்படியே வாழ்ந்து காட்டவும் அங்கிருக்கிறவர்கள் முயற்சிசெய்கிறார்கள்" என்று ஜோ கூறினான்.

தன்மீது நம்பிக்கை வைத்த அந்த விசுவாசிகளின் ஊக்கத்தால், ஒரு புதிய அழைப்பை ஜோ உணரத் தொடங்கினான். இன்று, இறையியல் படித்து வருகிறான்; போதகர் பணிக்கு தன்னை ஆயத்தப்படுத்துகிறான். ஓய்கோஸ் ஹவுஸில் சேவை செய்யவும், புதிதாக சபைக்கிளைகளைத் தொடங்கவும் திட்டமுள்ளது.